## மேலதிக தகவல்கட்கும் உரையாடற் தேவைகளுக்கும் நாடவேண்டிய ஆலோசனை நிலையங்கள்:

**இருகலாச்சாரங்களிலும் அனுபவமுள்ள ஆலோசனை நிலையங்கள்:**

- www.zwangsheirat.ch – ஆரம்பத்தொடர்பு மின்னஞ்சல் மூலமாக.
- வெளிநாட்டவர்களுக்கான சேவைநிலையம் பாசல்-லாண்ட ald Tel: 061 827 99 10
- வெளிநாட்டவர்களுக்கான ஆலோசனை வழங்கும் நிலையம் (பாசல் நகரம்) GGG Tel: 061 206 92 22
- இரு கலாச்சாரங்களால் இணைந்த தம்பதியர் மற்றும் குடும்பங்களுக்கு ஆலோசனை வழங்கும் நிலையம் Tel: 061 271 33 49

**குடும்பங்களுக்கான ஆலோசனை வழங்கும் நிலையங்கள்:**

- பாசல் மாநிலம்: குடும்ப, தம்பதியர் மற்றும் வளர்ப்புச் சம்பந்தமான ஆலோசனை வழங்கும் நிலையம் Tel: 061 686 68 68
- பாசல்-லாண்ட் மாநிலம்: சம்பந்தமான விலாசங்களை www.fejb.ch என்ற இணையத்தளத்தில் அல்லது வெளிநாட்டவர்களுக்கான சேவைநிலையம் ald ல் பெறலாம்.

**அவசர தேவைகளுக்கு:**

- காவற்துறை (Polizeinotruf) Tel: 117
- பாசல், பாசல்லாண்ட் மாநிலத்தில் பாதிக்கப்பட்டோருக்கான உதவி வழங்கும் அமைப்பு (Opferhilfe beider Basel) Tel: 061 205 09 10

GGG Ausländerberatung · ald Ausländerdienst Baselland · PROJEKTE GEGEN ZWANGSHEIRAT · Schweizerische Eidgenossenschaft Confédération suisse Confederazione Svizzera Confederaziun svizra

அரச ஒருமைப்பாட்டு நிதிப்பிரிவினூடாக (BFM) ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.
www.zwangsheirat.ch இதற்கு மனமார அனுமதி வழங்கியுள்ளது.

Tamilisch

# சுவிசில் திருமணம், கணவன் மனைவி தொடர்பான பெற்றோருக்கான தகவல்கள்



நீங்கள் ஒரு இக்கட்டான நிலையிலும் உங்கள் பிள்ளையின் எதிர்காலத்தையிட்டு யோசனையுடனும் இருக்கிறீர்களா? பின்வரும் பக்கங்களில் சுவிசில் திருமணம் மற்றும் கணவன் மனைவி சம்பந்தமான விபரங்களும் முக்கியமான தொடர்புகளுக்கான முகவரிகளும் தரப்பட்டுள்ளன.

«எனது மகன்மார் காதலித்துத் திருமணம் செய்வது முக்கியமானது:»
(டாவிடெ மனிஸ்காலோ, 45, பிறப்பிடம் சிசிலியன், 17 வருடங்களாகச் சுவிசில் வாழ்பவர், கெலென் மனிஸ்காலோ சுவாற்சன்துறுாபர், 41, பிறப்பிடம் பாசல)

**திருமணம் என்பது 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குத்தான் சாத்தியம்:** இருவரும் 18 வயதுப் பூர்த்தியின் பின்தான் திருமணப்பதிவு செய்யலாம்.

**எந்த ஒரு பெண்ணும் ஆணும் தத்தமது துணையைச் சொந்தவிருப்பிற் தெரிவு செய்யலாம்: யாரையும் திருமணத்துக்குக் கட்டாயப்படுத்த முடியாது.** இருவரினதும் சொந்த விருப்பத்தின்மூலமே தம்பதியர் ஆகின்றார்கள். ஆணோ அல்லது பெண்ணோ துணையை மறுக்கமுடியாத சந்தர்ப்பமுண்டாகும் நிலையைத்தான் கட்டாயத்திருமணம் எனக் கருதப்படுகிறது.

**ஆணுக்கும் பெண்ணுக்கும் எங்கும் எதிலும் சம உரிமையுண்டு:** ஆணைப் போலவே பெண்ணுக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் கருத்துரிமையுண்டு. பெண்ணின் கருத்தும் ஆணின் கருத்தைப் போலவே சமவலிமை வாய்ந்தது.

**எந்தவொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் விவாகரத்துச் செய்து கொள்ளும் உரிமையுண்டு:** திருமண ஒப்பந்தம் விவாகரத்து மூலம் இரத்துச் செய்யப்படலாம். இருவரும் விவாகரத்தை விரும்பின் இருவரும் சேர்ந்து நீதிமன்றத்திற் கேட்கலாம். ஆண் அல்லது பெண்ணில் ஒருவர் மட்டும் விவாகரத்தை விரும்பின் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்.

**வேறு கலாச்சாரங்களில் வேறு விதமான உரிமைகளுண்டு என்பதுடன் «திருமணம் கணவன் மனைவி» என்பது பற்றிய அணுகு முறையும் வேறுபட்டதேயென்றாலும் சுவிசில் மேற்குறிப்பிடப்பட்ட விதிமுறைகளே நடைமுறையிலுள்ளது. இக்காரணத்தாற் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு நல்லதையே செய்ய எண்ணினாலுங்கூடத் திருமணம் என்ற கண்ணோட்டத்தில் மாறுபட்ட கலாச்சார முறைகளினால் சச்சரவுகள் உருவாகின்றன.**

«நான் பாரம்பரியத்திற்கு எதிரல்ல ஆனால் கட்டாயத் திருமணத்திற்கு எதிரானவர்.»
(செறிபான் அக்யில்டிஸ், 36, துருக்கியிலிருந்து வந்தவர், மெட்யா, 13, அர்யா, 7, சுவிசில் பிறந்தவர்கள)

அன்பான பெற்றோர்களே

நீண்ட நாட்களின் பின்னர் உங்களுக்கு இக்கடிதத்தை எழுத மிகவும் கடினமாகவுள்ளது. எங்களது பிரிவினை என்னை ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கியது மட்டுமல்ல பல தூக்கமற்ற இரவுகளைகளையும் உண்டாக்கியுள்ளது. கோபம், ஏமாற்றம் மற்றும் அக்கறை காரணமாக நீங்கள் தினமும் என்னைப்பற்றி நினைப்பீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். **நீங்கள் எனக்கு நல்லதையே செய்ய விரும்புகிறீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். நானும் உங்களை நன்கு நேசிக்கிறேன். ஆனால் நான் நேசிக்காத ஒரு ஆணை என்னாற் திருமணம் செய்து கொள்ளமுடியாது. செய்யவும் மாட்டேன்.**

தயவுசெய்து என் மீது கோபம் கொள்ளாதீர்கள். நீங்கள் எனது பிள்ளைப்பராயத்தையும் இளம்பராயத்தையும் வழிநடத்தினீர்கள். இப்போது எனது பாதையை நானே அமைக்கவேண்டும். இப்பாதையைச் சிலவேளைகளில் உங்களால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கலாம். ஆனால் எப்போதோ ஒரு நாள் என்னையிட்டுப் பெருமையடைவீர்கள் என்பதை உறுதியாக உங்களுக்குக் கூறுகிறேன். **நாம் ஒரு நாள் மனக்கசப்பின்றிச் சந்தோசமாக இணைய வேண்டுமென ஆழமாக வேண்டிக் கொள்கிறேன்.** எனக்குத் தெரிவு செய்யும் வாய்ப்புக் கிடைத்தால் மீண்டும் நீங்களே எனது பெற்றோராக வருவதையே விரும்புவேன்.

**உங்கள் அன்பு மகள்**

«எனது மகள் தானே தெரிவு செய்கிறாள் அது எனக்கு முக்கியம்.»
(எம். கசான் றகிமிபார், 59, ஈரானிலிருந்து 1998ம் ஆண்டு சுவிசுக்கு வந்தவர், எல்னாஸ், 21, எலீசா 16, 2000ஆம் ஆண்டிலிருந்து சுவிசில் வசிக்கிறார்கள்.)